இருப்பதோடு அந்த சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்திற்குள்ளே பத்ரகாளிக்கு என்று ஒரு கோயிலும் உள்ளது. அந்த கோயிலுக்கு பௌர்ணமி நாளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து போகிறார்கள். அவர்களுடைய நன்மையைக் கருதி, அந்த சங்கராபரணி ஆற்றில் ஒரு தரைப்பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும். நாங்களும் அதற்கு உறுதுணையாக இருப்போம்.

பால் விநியோகத்திற்கு வயர்லஸ் கருவி.

640—(*வினா எண் 7253)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகத்தை சீர்படுத்துவதற்காக வயர்லஸ் கருவிகளைப் பயன்படுத்தும் திட்டம் எப்போது முதல் செயல்படும்?

(ஆ) இந்த திட்டம் எந்தப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் வயர்லெஸ் கருவிகள் பயன்படுத்தும் திட்டம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் அம்பத்தூரிலும் நந்தனத்திலும் அமுலில் உள்ளது. மேலும் மாதவரத்திலும் நிலையான நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய பால் பண்ணை வாரியத்தின் கொள்கையின் அடிப்படையில் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வரும் ஒன்பது மாவட்டங்களில் (very high frequency) செயல்பட ஒரு திட்டம் அமல்படுத்தப் பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தால் ஏற்படும் பலன் என்ன? இதற்காக அரசு செலவழிக்கிற தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் மற்றும் பால் ஏற்றிச் செல்கின்ற லாரிகள் இவைகளில் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கும், குற்றங்கள் நடந்தால் உடனுக்குடன் கண்டு பிடிப்பதற்கும் இது பயன்படுகிறது.